## வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: முதல்வர் (மு.கூ.பொ.) முனைவர் ப.உமாதேவி, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,

**ந.க.எண்: 568/அ/2025, நாள்: 08.07.2025**

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நேரடி நியமனம் – தொகுதி-IV – 2022-23-ஆம் ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது – திரு.ர.அறிவழகன் இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக:-

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித ந.க.எண்: 1926/PSD-D2/2023, நாள்: 04.09.2023.
2. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 35681/பி1/2023, நாள்: 23.11.2023.
3. இவ்வலுவலக முதல்வர் செயல்முறைகள் ந.க.எண்: 380/அ/2023, நாள்: 24.11.2023.
4. சென்னை, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்:TNDCE/4777/2025-B1, நாள்: 26.06.2025.

---------

பார்வை 1-இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தில் தொகுதி-IV 2022-2023-ஆம் ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 2-இல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, இக்கல்லூரிக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 3-இல் காணும் இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகளின்படி திரு.ர.அறிவழகன் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு 27.11.2023 முற்பகல் பணியில் சேர்ந்தார். இதனைத் தொடர்ந்து பார்வை 4-இல் காணும் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, மேற்காணும் பணியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளைத் தெரிவித்து பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**"இப்பணி வரன்முறை தொகுதி IV பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது"**

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிகாலத்தில் இரண்டாண்டுகள் தகுதி காண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் என்றும், இக்காலகட்டத்திற்குள் பவானிசாகர் மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

08/07/25

முதல்வர் (மு.கூ.பொ.)

முதல்வர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வீரபாண்டி - 625 534.
தேனி மாவட்டம்

பெறுநர்:
திரு.ர.அறிவழகன், இளநிலை உதவியாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வீரபாண்டி.

நகல்:-
1. கல்லூரிக் கல்வி ஆணையர், சென்னை.
2. உபரி-2.

08.07.25